# தமிழ் இலக்கியங்களில் சித்தர்கள்

*முனைவர் ஜெ. திருப்பதி*
மதிப்புறு விரிவுரையாளர், தமிழ்த்துறை
ஜவஹர்லால் நேரு அரசுக் கல்லூரி, போர்ட் பிளேயர்
அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5045

## முன்னுரை

தமிழ் இலக்கியப் படைப்புகள் காலந்தோறும் வடிவத்தாலும், பொருளாலும் மாறுபட்டு வந்துள்ளன. இலக்கிய வடிவங்கள் சுருக்கமும் செறிவும் வாய்ந்த வடிவமாதலால் தமிழர்கள் எல்லாவற்றையும் பாட்டு என்ற வடிவத்திற்குள்ளேயே ஆக்க முற்பட்டனர். தமிழில் காலந்தோறும் ஏற்பட்ட பதிவுகளில் சித்தர்களின் சிந்தனைப் பதிவும் குறிப்பிடத்தக்கது. சித்தர் இனம் நீண்ட நெடுங்காலமாக இந்த நிலத்தில் வேரூன்றி விழுது பரப்பி வருகிறது.

***எனக்கு முன்னே சித்தர்பலர் இருந்தார் அப்பா !***
***யானும் வந்தேன் ஒருசித்தன், இந்த நாட்டில் !***

**(பாரதி அறுபத்தாறு -1 )**

என பாரதி தன்னைச் சித்தர் பரம்பரையில் இணைத்துக்கொண்டு பெருமைப்படுத்துகிறார். பட்டினத்தாரும், தாயுமாணவரும், வள்ளலாரும் சித்தர் தத்துவங்களைக் கோட்பாடுகளாக்கிக் கொடுத்தவர்கள்

## சித்தர் என்ற சொல்லின் பொருள் விளக்கம்

“சித்“ என்ற அடிச் சொல்லிருந்து சித்தன் என்ற சொல் பிறக்கும் “சித்” என்பதற்குப் பேரறிவு என்பது பொருள் .பேரறிவு பெற்றவர்கள் சித்தர்கள். சாமி சிதம்பரனார், “சித்தர்கள்” என்றால் அறிவு படைத்தவர்கள், அறிஞர்கள், மேதைகள், பேரறிவு படைத்தவர்கள், விஞ்ஞானிகள், மெய்ஞ்ஞானிகள் என்று பொருள் சொல்லுவதே பொருத்தமாகும் என்பர். “சித்து” என்னும் சொல்லைக் குறிக்க “மிஸ்டிஸம்” எனவும் சித்தர்களை குறிக்க “மிஸ்டிக்ஸ்” எனவும் ஆங்கிலத்தில் கூறுவர். “முஸ்டஸ்” என்னும் கிரேக்கச் சொல்லினின்று “மிஸ்டிசிஸம்” என்னும் சொல் தோன்றியது. இக்கிரேக்கச் சொல்லுக்கு வாழ்க்கையைப் பற்றிய (பிறப்பு மற்றும் இறப்பு) நுண்ணிய அறிவு என்பது பொருள்

**ஊதுகிற வூத்தறிந்தா லவனே சித்தன்**
**(ஔவைக்குறள் மூலமும் உரையும், ப -37)**
**சாத்திரத்தைச் சுட்டெரித்தால் அவனே சித்தன்**
**(சித்தர் ஞானக் கோவை, அகத்தியர் ஞானம் -5)**
**சிந்தை தெளிந்திருப்பவனே சித்தன் ..............**
**செகமெல்லாம் சிவமென்ற யறிந்தோன்**
**(வான்மிகி சூத்திரம் -16)**
**ஆச்சப்பா தத்துவத்தை யுணர்ந்த்தோன் சித்தன்**
**(அகத்தியர் தத்துவம் -108)**

என்று பலரும் விளக்கியுள்ளமையைக் காணலாம்.

தமிழ் இலக்கண,இலக்கிய நூல்களும் "சித்தர்" என்ற சொல்லுக்கான பொருள் விளக்கத்தையும், சித்தர்கள் பற்றிய குறிப்புகளையும் எடுத்தியம்புகின்றன. அவற்றில் தமிழில் கிடைக்கப்பெற்ற முதல் நூலான "தொல்காப்பியத்தில்" தொல்காப்பியர்

**மறுவில் செய்தி மூவகைக் காலமும்**
**நெறியின் ஆற்றிய அறிவன்**

எனக் கூறுகிறார். இவற்றில் அறிவனைச் சித்தராகக் கொள்ள இடம் உண்டு. அறிவனை விளக்கும் இளம்பூரணர், வானியலோடு கலந்து வருங்காலம் உணர்த்துகின்ற "கணியன்" என்று கூறுகிறார். நச்சினார்க்கினியர், காமம், வெகுளி, மயக்கமில்லாத ஒழுகலாற்றினன் இறப்பும், நிகழ்வும், எதிர்வும் என்னும் மூவகைக் காலத்திலும் வழங்கும் நெறியான் அமைந்த முழுதுணர்வுடையோன், என்றும் விளக்குகிறார். இவிலக்கம் சித்தர் என்ற சொல்லுக்குரிய பொருளாக அமைகிறது..

**இலக்கிய அணியில் சித்தர் பாடல்கள்**

தமிழிலக்கியங்கள் பல திறம்படுவனவாகும். அவை சங்கப் பாடல்கள் என்னும் தன்னுணர்ச்சிப் பாடல்களாகவும் பொருளுனர்ச்சிப் பாடல்களாகவும், காப்பியங்களாகவும், சிற்றிலக்கிய வகை களாகவும் காணப்படுகின்றன. அவற்றுள் சித்தர் பாடல்கள் தனித்திறம் பெற்றுச் "சித்தரிலக்கியம்" எனும் வகைமையைத் தோற்றி நிற்கின்றன

**சங்க இலக்கியத்தில் சித்தர்கள்**

சித்தர் என்ற சொல்வழக்கு பழந்தமிழ் இலக்கியங்களில் இல்லையென்றாலும், சித்தர் என்ற சொல்லுக்கான பொருளை உணர்த்தும் பிறசொற்கள் சங்ககால இலக்கியங்களில் காணப்படுகின்றன. தொல்காப்பியத்திலும், 6 திருக்குறளிலும்[7] பயின்றுவரும் நிறைமொழி மாந்தர் என்ற தொடர், சித்தர்களைக் குறிப்பதாகக் கொள்ளலாம். தொல்காப்பியத் தொடருக்கு, உரை கூறுகையில், சொல்லிய சொல்லின் பொருண்மை யாண்டும், குறைவின்றிப் பயக்கச் சொல்லும் ஆற்றலுடையார் என்கிறார் பேராசிரியர். திருக்குறள் தொடருக்கு உரைகூறும் பரிமேலழகர், நிறைமொழி மாந்தர் என்பது, அருளிக் கூறினும், வெகுண்டு கூறினும், அவ்வப்பயன்களைப் பயந்தே விடும் என்கிறார். உரையாசிரியர்கள் தரும் விளக்கத்தின் அடிப்படையில், நிறைமொழி மாந்தர் என்ற தொடர், சித்தர்களைக் குறிக்குமெனக் கருதலாம்.

புறநானூற்றுப் பாடலில் இடம்பெறும், திறவோர் காட்சி என்ற தொடர் சித்தர் அனுபவம் என்று குறிப்பதாகக் கொள்ளலாம். இத்தகைய திறவோர் எனப்படுவர், முக்கால நிகழ்வுகளையும், தம் அகத்திலே காணும் ஆற்றல் உடையவர்கள். உலகியல் இன்பதுன்பங்கட்கான உண்மைக் காரணத்தை அறிய வல்லவர்கள். இன்னோர் தம் அகக்காட்சியில் உலகியல் அறிவும், உயிர் அறிவும் தெளிவும்படும். சித்து எனப்படும் இயற்கை மீறிய அற்புதங்களைப்

பற்றிய குறிப்பு, குறுந்தொகைப் பாடலில் காணப்படுகிறது. இப்பாடலுக்கு விளக்கம் நல்கும் உரையாசிரியர், இப்பாடலில் குறிக்கப்படும் ஆற்றல்களும், இயற்கை கடந்த மீவியல் செயல்களுமான, பூமியைத் தோண்டி உள்ளே புகுதல், ஆகாயத்தின் கண் ஏறுதல், கடல்மேல் காலால் நடத்தல் போன்றவற்றைச் சித்து என்ற சொல்லல் குறிக்கின்றார்.

**காப்பியங்களில் சித்தர்கள்**

சங்கம் மருவிய காலத்தில் எழுந்த இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரத்தில் சில இடங்களிலும், மணிமேகலையில் பல இடங்களிலும், சித்து, சித்தம், சித்தன் ஆகிய சொற்கள் பயன்று வருகின்றன.

சிலப்பதிகாரத்தில், சித்தி என்ற சொல் விரும்பியதைப் பெறுதல் என்னும் பொருளில் இடம்பெறுகிறது. சமணர் வணங்கி வழிபடும் அருகனின் புகழ்பாடுவதாக அமைந்துள்ள தொடரில் வரும் அறிவன், அறவோன், அறிவு, வரமிகுந்தோன், செறிவன், சித்தன், பகவன், பொருளன், புனிதன், புராணன், தத்துவன், சாதுவன், சாரணன், காரணன் என்ற சொற்கள் அருகக் கடவுளைக் குறிப்பதாக அமைந்துள்ளன.சித்தன் என்ற சொல்லுக்கு, செய்ய வேண்டுவனவற்றைச் செய்து முடித்தவன், கன்மங்களைக் கழுவியவன், எண்வகைச் சித்து களையும் உண்டாக்கியவன் என்றவாறு பொருளுரைக்கின்றனர்.

மணிமேகேலைக் காப்பியத்துள், சித்தம் என்ற சொல், பல பொருள்களில் கையாளப்படுகிறது. உறுதி, நிச்சயம் என்ற பொருளிலும் மூலப்பொருளாகிய பிரகிருதி என்ற பொருளிலும், மனக்கொள்கை என்ற பொருளிலும் இச்சொல் வழங்கப்படுகிறது

திருமந்திரத்தில் சித்தர்

சைவத்திருமுறைகளில், பத்தாம் திருமுறையாகத் திருமந்திரம் விளங்குகிறது. யோகம், யோகவகை, உறுப்புகள், எண்பெரும் சித்துகள், ஞானம் என்பன பற்றி விரிவாகக் கூறும் முதல் தமிழ்நூல் திருமந்திரம் ஆகும்.. திருமூலர், சிவனை, சித்தன் என்றும், சிவநெறி பற்றிய சீவன் முக்தர்களை, சித்தர் என்றும் குறிக்கிறார். திருமந்திரத்தில் சித்தம் என்ற சொல் பல இடங்களில் பேரரறிவு, தூய அறிவு, தெளிந்த அறிவு, என்ற பொருள்களில் வழங்கப்படுகிறது.

எல்லாம் அறிந்த சித்தனாகச் சிவனைத் திருமூலர் குறிக்கின்றார், அறிவன் என்ற பழந்தமிழ்ச் சொல்லுக்கு ஈடாக சித்தன் என்ற சொல் திருமந்திரத்தில் வழங்கப்படுகிறது.

**பக்தி இலக்கியத்தில் சித்தர்**

தேவார ஆசிரியர்கள், தம் வலிபடு கடுவுலாகிய சிவனைக் குறிக்கவும், சிவனடியார்களுள் ஒருவகையினரைக் குறிக்கவும், சித்தர் என்ற சொல்லைப் பல இடங்களில் பயன்படுத்துகின்றனர்.

**அன்னியூர் சித்தர் தாள்தொழ முத்தர் ஆவரே**

**மதயானை உரித்தளம் சித்தனை**

என்ற தேவாரத்தொடர்களும்,

பரகதி கொடுத்து அருள் செய்யும் சித்தனே என்ற திருவாசகத் தொடரும் பரம்பொருளையே சித்தன் என்று சுட்டுகிறது.

திருநறையூரில் உள்ள சிவாலயத்திற்கு, சித்தீச்சுரம் என்று பெயர். இங்கு சித்தர்கள் பூசிக்க இறைவரும் சித்தராய் எழுந்தருளினார் என்று குறிக்கப்படுகிறது.

மேலும் இறைவன் அறிவு வடிவானவன் என்பதைக் குறிக்கும் வகையில், சித்தன் வடிவினன் போலும் என்னும் தேவாரத் தொடர் அமைகிறது.

முத்தி நிலையுற்று, நிலவுலகை நீங்கி, வானுலகில் நுண்ணுடலோடு வாழும் தேவகணத்தாரோடு வாழும் ஓர் இனத்தவராகச்

சித்தர்கள் கருதப்படுகிறார்கள் என்ற குறிப்பு திருஞானசம்பந்தர் பாடிய திருநள்ளாறு, திருமுதுகுன்றம், திருக்கக்குடி, திருப்பழூவூர், திருநின்றியூர், திருக்கானூர், திருப்பாவை, திருமணஞ்சேரி ஆகிய தேவாரப் பதிகங்களில் காணப்படுகிறது.

திருஞானசம்பந்தர், சித்தர் என்ற சொல்லைப் பல இடங்களில் கையாளுகின்றார். திருநாவுக்கரசர் தம்தேவாரத்தில் பல இடங்களில், குறிப்பாக, சித்தர்களின் மனநிலையை உணர்த்துகிறார்.

**சித்தத் துருகிச் சிவன்எம் பிரானென்று சிந்தையுள்ளே**
**பித்துப் பெருகப் பிதற்றுகின்றவர்**

என்னும் வரிகள் சித்தர்களின் அகநிலையைக் குறிப்பது போன்று அமைகிறது. வெளிப்புலன் நோக்கியும், ஐம்பொறிகளையும் தடுத்து உள்முகமாக நேரிப்படுத்துகின்றவரின் சித்தம் ஒடுங்கும், அவ்வாறு ஒடுங்கிய சித்தத்துள் அவர்கள் இறைவனைக் காண்பர் என்கிறார் திருநாவுக்கரசர்.

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன் என்று சுந்தரர் பாடுகிறார்.

மாணிக்கவாசகரோ, இந்திரியங்களை ஆளுகையில் அலைந்து திரிந்து நரகில் வீழ்ந்திடாமல் சிந்தையைத் தெளிவித்து, அதனையே சிவப்பரம்பொருளாக்கிடும் நிலையைக் குறிப்பிடுகிறார்.

பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற்புராணத்தில் எல்லாம் வல்ல சித்தரான படலம், அட்டமா சித்தி உபதேசித்த படலம், கல்லானைக்குக் கரும்பருந்திய படலம் ஆகிய பகுதியில் பலவகைச் சித்துக்கள் குறிக்கப்படுகின்றன. சிவபிரான் எல்லாம் வல்ல சித்தராகச் சுட்டப்படுகிறார்.

## முடிவுரை

தமிழ் இலக்கியப் படைப்புகள் காலந்தோறும் வடிவத்தாலும், பொருளாலும் மாறுபட்டு வந்துள்ளன. இலக்கிய வடிவங்கள் சுருக்கமும் செறிவும் வாய்ந்த வடிவமாதலால் தமிழர்கள் எல்லாவற்றையும் பாட்டு என்ற வடிவத்திற்குள்ளேயே ஆக்க முற்பட்டனர்.

சித்தர் சிந்தனை வளமும் கருத்துக் கொடைகளும், எண்ண விரிவுகளும் தவஞானியர்களின் சிந்தனை எச்சங்களாக மொழியைச் செழுமைப்படுத்தி உள்ளன.

தமிழ் நாட்டு வரலாற்றிலும், இலக்கிய வரலாற்றிலும் சித்தர்கள் நூற்றுக்கணக்கான நூல்கள் மூலமாகவும், வெளிவராத ஏடுகள் மூலமாகவும் மக்களுக்கும், மொழிக்கும் ஆற்றியுள்ள தொண்டினை இங்கு நன்கு அறியலாம்.

சித்தர்களின் மெஞ்ஞான தத்துவமும், விஞ்ஞான உணர்வும், காலத்தை வென்ற கருத்தும் தமிழுக்கு அழகையும் வலிமையும் வனப்பையும் தந்துள்ளதை காணமுடிகிறது.

## சான்றாதாரங்கள்

1. மாணிக்கவாசகம். இரா. நம் நாட்டுச் சித்தர்கள் , பா-27
2. சிதம்பரனார். சாமி. சித்தர் கண்ட விஞ்ஞான தத்துவம், பா-23
3. மாணிக்கவாசகம். இரா. நம் நாட்டுச் சித்தர்கள், பா-32
4. மாணிக்கவாசகம். இரா. நம் நாட்டுச் சித்தர்கள், பா-11
5. மாணிக்கவாசகம். இரா. நம் நாட்டுச் சித்தர்கள் , பக் -27 - 28
6. மாணிக்கவாசகம். இரா. நம் நாட்டுச் சித்தர்கள் , பா -29
7. தொல்காப்பியம், பொருள் - புறத் திணையியல் - நூ: 2 : 16
8. தொல்காப்பியம், இளம்பூரணர் (உ - ஆ ) நூ -2
9. தொல்காப்பியம், நச்சினார்க்கினியர் (உ - ஆ) நூ -2
10. புறநானூறு. பா -43 : 1 - 4
11. குறுந்தொகை, பா -130 : 1 - 2
12. மணிமேகலை, பா -24 : 46 - 47

13. பெருங்கதை, பா -34 : 86 - 90
14. சூடாமணி நிகண்டு மூலமும் உரையும், பா -36
15. பட்டினத்தார் பாடல், பொது : பா -1
16. பட்டினத்தார் பாடல், பொது : பா -35
17. சிவவாக்கியர் பாடல் - பா : 566
18. சிவவாக்கியர் பாடல் - பா : 182
19. வால்மீகர் சூத்திர ஞானம் : 2 : 2
20. திருவாய்மொழி -2952
21. திருவாய்மொழி-2971
22. திருவாய்மொழி, பேயாழ்வார் -76
23. சிவவாக்கியர் பாடல் - பா : 3
24. திருமந்திரம் : 1823
25. தெய்வநாயகம். சி. கோ. சித்தர் சிந்தனை : பக் -66
26. தெய்வநாயகம். சி. கோ. சித்தர் சிந்தனை : பக் -66
27. தெய்வநாயகம். சி. கோ. சித்தர் சிந்தனை : பக் -67